தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 74/2021 | சாட்சியம் | : | **MW1** |
| **Name** | : | திரு.நவீன் வில்சன் பிரசாத் | | | |
| **Date** | : | **25.06.2026** | | | |
| **Time** | : | **10.33 a.m to 10.42 a.m** | | | |

நி.த.சா.**1.**திரு.நவீன் வில்சன் பிரசாத் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட தொழிலாளியை எனக்கு நேரடியாக தெரியும். மனுதாரர் உள்துறை விசாரணை நடவடிக்கை குறித்து ஆட்சேபணை தெரிவிக்காமல் சட்டப்பிரிவு 11(A) கீழான விசாணையை தொடங்கலாம் என தன்னுடைய சாட்சியத்தை சொல்லி உள்ளாரா என்றால் ஆமாம். தொ.சா.ஆ.**11** கடிதத்தில் மனுதாரர் குற்றத்தை ஒப்புக்கொண்டால் தான் மீண்டும் வேலை தருவதாக நிர்வாகம் சொன்னதாக சொல்லி உள்ளார் என்றால் கடிதத்தில் அவர் அவ்வாறு சொல்லி உள்ளார் ஆனால் நிர்வாகம் எவ்வாறு சொல்லவில்லை. அந்த கடிதத்திற்கு நிர்வாக தரப்பில் பதில் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் அதுபோன்று எந்தவித தகவலும் நாங்கள் மனுதாரருக்கு தெரிவிக்காத காரணத்தினால் பதில் எதுவும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. நி.சா.ஆ.**29** கடிதத்தில் மனுதாரர்

தனக்கு மீண்டும் வேலை வழங்கும் பட்சத்தில் ஒழுங்காக வேலைக்கு வருவதாக தெரிவித்துள்ளார் என்றால் ஆமாம். மனுதாரருக்கு நிர்வாகம் வழங்கிய தண்டனை மிகவும் அதிகபட்சமானது என்றால் சரியல்ல. மனுபடி நிவாரணம் வழங்க நிர்வாகம் கடமைப்பட்டுள்ளது என்றால் இல்லை.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by her to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:25.06.2026.